இருக்கின்றன. இவைகளில் உற்பத்தி செய்யப்படுகிற நூல் சிட்டநூல், மற்றும் கோன் நூல் போன்றவை நெசவாளர்களுக்குத் தருவதுபோக மீதி இருக்கிறது. இப்போது தமிழகம் நூல் உற்பத்தியில் உபரி மாநிலமாக இருக்கிற காரணத்தினால், தற்சமயம் அது தேவையில்லை என்று துறை கருதுகிறது.

முற்பகல் 10-10

திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தொகுதி மட்டுமல்லாது சுற்றுப் பக்கத்தில் உள்ள சங்கரன்கோயில், தென்காசி போன்ற பகுதிகளில் 10,000-க்கும் மேற்பட்ட நெசவுத் தொழிலாளர்கள் உள்ளனர். எனவே, வரும் ஆண்டிலாவது, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியிலாவது எனது கோரிக்கை பரிசீலிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்த மாவட்டத்தில் ஒரு நூற்பாலை இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், நாம் நூல் உற்பத்தியில் உபரி மாநிலமாக இருக்கின்றோம். நம்முடைய நூற்பாலைகள் இல்லாமல், பல நூற்றுக்கணக்கான நூற்பாலைகள் தமிழகத்திலே இருக்கின்றன. நூல் உற்பத்தி விநியோகத்தில் நாம் உபரி மாநிலமாக இருக்கின்ற காரணத்தால் தற்போது இது அவசியம் இல்லை என்று துறை கருதுகின்ற காரணத்தால், இதைப் பரிசீலிக்க இயலாது என்பதனை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 70, திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

70—

வைகை ஆற்றைக் கடக்க மதுரையில் புதிய பாலம்.

*3252—திரு. ஓ. எஸ். அமர்நாத் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை நகரில் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட விக்டர் பாலம் உடைந்து விழும் நிலையில் உள்ளதால் மாற்று வழியாக வேறு பாலம் ஒன்றை தியாகராசர் கல்லூரி பக்கம் வைகை ஆற்றைக் கடந்து அண்ணா நகரை இணைக்க பாலம் கட்டப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரிலிருந்து வெளியூர்களுக்குச் செல்ல வேண்டுமென்றால், வைகை ஆற்றில் விக்டர் பாலம் வழியாகத் தான் கடந்து செல்ல வேண்டும். அந்தப் பாலம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட பாலம். மிகவும் பலவீனமாக இருக்கின்றது. எந்த நிலையிலும் உடைந்து விடும் அபாயக் கட்டத்தில் இருப்பதால், அதற்கு மாற்று வழியாக, வைகையின் குறுக்கே தியாகராயர் கல்லூரியிலிருந்து அண்ணா நகர் வரை இணைக்க பாலம் கட்டுப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தினுடைய சீர்கேடுகளைக் களைவதற்காக ஏறத்தாழ 22 இலட்சம் ரூபாய் இப்போது செலவழிக்கப்பட்டு வருகின்றது. இப்பாலத்தின் வழியாகச் சென்ற வாகனப் போக்குவரத்துக்கள் எதுவும் இதுவரை பாதிக்கப்படவில்லை. இது தவிர, மதுரைக்குப் புறநகர் வழி ஏற்படுத்துவதற்காக ஏறத்தாழ 3.26 இலட்சம் ரூபாய் செலவிலே ஒரு ''ரிங் ரோடு'' போடுவதற்கு அனுமதி கேட்டிருக்கிறோம். இது போக, இந்தப் பாலத்திற்கு அருகாமையிலே இருக்கின்ற ஒரு தாம்போகி பாலத்தை உயர் பாலமாகக் கட்டுவதற்காக $6\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவிலே இன்றைக்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இப்படிப்பட்ட நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே இந்தப் பாலத்தை மேற்கொண்டு செலவிட்டுக் கட்ட வேண்டிய அவசியம் இல்லை என்று கருதப்படுகிறது.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரிலே லாரி போன்ற போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாகப் போய்க் கொண்டிருக்கின்றது. அந்த மேம்பாலம் வழியாக லாரிகள் போவதைத் தடுத்து, அதற்குச் சமமாக இருக்கும் தரைமட்டப் பாலத்தின் வழியாகப் போக்குவரத்து ஏற்படுத்துவதற்கு ஏதேனும் கருத்து உள்ளதா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : இதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எ. தெய்வநாயகம்.

1992 பிப்ரவரி 6]

திரு. எ. தெய்வநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது, விக்டர் பாலம் பழுதினைச் செப்பனிடுவதற்குக் கையாளப்படுகின்ற உத்தியைக் காட்டிலும், இந்த '' ரிங் ரோடு'' பாலம் அமைப்பதிலும், குருவிக்காரன் சாலைப் பாலம் அமைப்பதிலும் பல கோடி ரூபாய்க்கான திட்டங்களைத் திட்டமிட்டுக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், இந்த நிலை எவ்வளவு காலத்தில், செய்து முடிக்கப்படும் ; எவ்வளவு சீக்கிரத்தில் விரைவுபடுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' ரிங் ரோடு '' என்று சொல்லப்படுகின்ற '' வட்டச் சாலை '' சம்பந்தமான நடவடிக்கைகளுக்கு ஏறத்தாழ 88 இலட்சம் ரூபாய்க்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட இருக்கிறது. ஆகவே, அந்த நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட நடவடிக்கை முடிந்தவுடன், அந்த வேலை தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது தவிர, இந்த 6 ½ கோடி ரூபாய் செலவிலே ஏற்படுத்தப்பட இருக்கின்ற உயர் மட்டப் பாலத்திற்கு மேற்கொள்ளப்பட்ட திட்டம் உலக வங்கியின் நிதி உதவியோடு செயலாக்கப்பட வேண்டிய திட்டம். தமிழ்நாடு அர்பன் டெவலப்மெண்ட் ப்ராஜெக்ட் என்று சொல்லுகின்ற அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே இந்தத் திட்டம் செயலாக்கப்பட இருக்கின்ற காரணத்தினால், உலக வங்கியின் ஒப்புதலுக்காக இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டு இருக்கின்றது. அந்தத் திட்டத்தினுடைய ஒப்புதலைப் பெற்றவுடன் இந்த அரசு அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்தப் பாலங்களை கட்டுவதற்கான நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 71, திருமதி கே. பஞ்சவர்ணம், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

சுல்லான் ஆற்றை ஆழப்படுத்துதல்

—71*4207——திருமதி கே. பஞ்சவர்ணம் :-

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், வலங்கைமான் தொகுதியில் சுல்லான் ஆற்றில் மழைக்காலத்தில் வெள்ளம் பெருக்கெடுத்து ஆயிரக்கணக்கான பயிர் நிலமும் குடியிருப்புகளும் பாதிக்கலபடுவதால் சுல்லான் ஆற்றை ஆழப்படுத்தவும், அகலப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இத்தகைய திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

முற்பகல் 10.15

திருமதி கே. பஞ்சவர்ணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுல்லான் ஆறு என்''து என்னுடைய தொகுதி